முத்தமிழறிஞர் கலைஞர் குடிநீர் வழங்கிய

இராமநாதபுரத்திற்கு 35 ஊருணிகளை புனரமைத்து குடிநீர் பிரச்சனைக்கு தீர்வு காண்பீர்!

சட்டப்பேரவையில் காதர்பாட்சா முத்துராமலிங்கம் கோரிக்கை!

சென்னை, ஜன. 13-

சட்டப்பேரவையில் இராமநாதபுரம் காதர்பாட்சா முத்துராம லிங்கம் பேசுகையில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் இராமநாதபுரம் நகரத்திற்கு 35 ஊருணிகளை அமைத்து குடிநீர் வழங்கினார். அந்த ஊருணிகளை புனரமைக்க இராமநாதபுரம் நகரத்திற்கு குடிநீர் வழங்கிட வேண்டுமாய் தாயுமானவரான முதல்வரிடம் கேட்டுக்கொள்கிறேன் என தெரிவித்தார்.

சட்டப்பேரவையில் காதர்பாட்சா முத்துராமலிங்கம் பேசியதாவது- கஜானாவும் காலி, களஞ்சியமும் காலிகடன் மட்டுமே மீதி மிச்சம் என்ற நிலையில் 2021ம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பை ஏற்ற நாள் முதல், தன் சிந்தனை முழுவதையும், மாநிலத்தின் பொருளாதார வளத்தை மேம்படுத்திட, 24 மணி நேரத்தையும் பயன்படுத்தி வரும் ஒரே முதலமைச்சர் இந்தியாவிலேயே முதல்வர் அவர்கள் மட்டும் என்பது தான் நிகழ்கால வரலாறு, இதனை எதிர்கால வரலாறு உரைக்கும் என்பது திண்ணம் ஆகும்.

இந்தியாவில் 25க்கும் மேற்பட்ட மாநிலங்கள் இருக்கின்றன, பல்வேறு கட்சிகள் வேறுபட்ட கொள்கையின் அடிப்படையில் ஆட்சியமைத்து செயல்பட்டு வருகின்றனர். ஆயினும், தமிழ்நாட்டில் மட்டும்தான் திராவிட மாடல் ஆட்சி முதலமைச்சர் தலைமையில் ஏழை எளிய மக்களின் நலனைப் பாதுகாக்கும் வகையில் செயல் திட்டங்களை அமைத்து அவற்றை நிறைவேற்றுகின்ற அரசாக இந்த அரசு இருக்கின்றது என்பதைப் பெருமையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அந்த வகையில், மாநிலத் திட்டக் குழுவை உருவாக்

கியதுடன், உலகளாவிய பொருளாதார நிபுணர்களைக் கொண்டு சிறப்பு ஆலோசனைக் குழுவை அமைத்து, சரிந்துகிடந்த நிதி ஆதாரத்தை நிவர்த்தி செய்து தலை நிமிரச் செய்திட்ட முதலமைச்சர் அவர்களுக்கும், கழக அமைச்சர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றிகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறேன். அவ்விரண்டு திட்டக் குழுக்களின் சீரிய செயல்பாட்டின் காரணமாக 2030 ஆம் ஆண்டுக்குள் ஒரு ட்ரில்லியன் டாலர் பொருளாதாரத்தை உருவாக்கிட இலக்கை உயர்த்தும் நோக்கில் கழக அரசு செயல்படுவதைக் கண்டு உலக தமிழர்கள் பாராட்டி மகிழ்கின்றனர்.

பல முன்னோடித் திட்டங்களின் தமிழ்நாடு முன்மாதிரி மாநிலமாக இருப்பதைக் கண்டு அண்டை மாநில அமைச்சர்கள், அதிகாரிகள் நம் மாநிலத்திற்கு வந்து ஆலோசனைகளையும், வழிகாட்டுதல்களையும் பெற்றுச் செல்வதைக் கண்டு அனைத்து தரப்பினரும் பாராட்டி மகிழ்கின்றனர்.

கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டம்!

அனைத்து முதல்வர்களும், திட்டங்களுக்குரிய நிதியை ஒதுக்கீடு செய்கிறோம் என்று பெருமைப்பட்டுக்கொள்வார்கள். ஆனால், முதல்வர் அவர்கள் மட்டும்தான் அவர்கள் எதிர்காலத் தலைமுறைகளுக்காக இப்போது முதலீடு செய்து வருகிறோம் என்று பெருமிதம் கொண்டு பல்வேறு திட்டங்களை அறிவித்து மகிழ்ந்தார்கள். திராவிட மாடல் நாயகரின் தொலைநோக்கு பார்வைக்கு மிகச்சிறந்த திட்டமாக அமைந்திருப்பது சிறார்களுக்கான காலை சிற்றுண்டி திட்டமாகும். இத்திட்டத்தை இங்கிலாந்து நாட்டின் தொழிலாளர் கட்சி தாமும் செயல்படுத்த போவதாக, தேர்தல் அறிக்கையிலே கூறி ஆட்சியைப் பிடித்துள்ளது பெருமைப்படதக்க விஷயமாக, சாதனையாக நாம் கருதுகிறோம். இத்திட்டம் இந்தியாவின் பிற மாநிலங்களில் தொடங்கப்படவுள்ளது எனும் செய்தி வந்த வண்ணம் உள்ளது. அதே போன்று பெண்களுக்காக, நமது முதலமைச்சர் அவர்கள் உருவாக்கியுள்ள 'கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தை' இந்தியாவில் உள்ள பல்வேறு கட்சிகளும் தங்களது நிதி ஆதாரத்திற்கு உகந்தவகையில் நிறைவேற்றுவோம் என்று தேர்தல் அறிக்கையிலே அறிவித்து, வெற்றியும் பெற்றிருக்கிறார்கள் என்பது கேட்பதற்கும், காண்பதற்கும் உள்ளம் பூரிக்கின்றது.

தாய்மார்களின் சகோதரராக திகழ்ந்து, மாதந்தோறும் மகளிருக்கு அவர்களது வங்கிக் கணக்கில் ரூ.1000/த்தை நேரடியாக சேர்பித்து வருகிறார் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள். அத்திட்டம் சிறப்பாக அனைத்து தகுதியுடைய மகளிருக்கும் கிடைத்திடவும், நமது துணை முதலமைச்சர் அவர்கள் உறுதி அளித்திருப்பதுடன், அதனை விரைவில் வழங்குவதற்கான சீரிய பணியில் ஈடுபட்டு வருகிறார்கள் என்பதன்மூலம் இன்றைக்கு திராவிட மாடல் அரசு மகளிரின் பொருளாதார மேம்பாட்டிற்கு வழிகாட்டும் அரசு என்பதை அழுத்தமாக பதிவு செய்ய விரும்புகின்றேன்.

அதேபோன்று மகளிர் விடியல் பயணத் திட்டம், பாராட்டாத வட மாநிலங்களே இல்லை, என்று வியந்து பாராட்டுகிறார்கள். ஒரு மாநில அரசால் எப்படி விடியல் பேருந்து பயணம் சாத்தியமாகிறது என்று வியந்து பார்க்கிறார்கள். காரணம் பகுத்தறிவும், விவேகமும், வீரமும், நெஞ்சில் ஈரமும், பரிவும் கொண்ட முதல்வர் அவர்களால் மட்டுமே இது சாத்தியமானது.

'புதுமைப்பெண் திட்டம்' இன்றைக்கு ஏழை எளிய சாமானியர் வீட்டு பெண் குழந்தைகளும் கல்வி கற்று, தமது சொந்த காலில் நிற்கும் வகையில் வேலைவாய்ப்பை உருவாக்கிய முதலமைச்சர் அவர்களுக்கும் கழக அரசுக்கும் தமிழ்ச் சமூகம் நன்றி பாராட்டுகிறது.

மாணவியருக்கு மேற்கானும் திட்டம் பயனடைவது போல மாணவர்களுக்கும் "தமிழ்ப்புதல்வன் திட்டம்" முதலமைச்சர் அவர்களால் தொடங்கப்பட்டு பயனடைந்து வருவதை கண்டு உலகமே பாராட்டுகிறது.

முதல்வரின் தொலைநோக்கு சிந்தனை!

எதிர்காலத்தில் இந்த 'நுண்ணறிவு இயக்கம்' (Artificial Intelligence) தான் உலகம் முழுவதும் ஆளப் போகின்றது என்பதை கருத்தில்கொண்டு தொலைநோக்கு சிந்தனையில் இந்த இயக்கத்தை தொடங்கியுள்ள தமிழ்நாடு முதல்வர் அவர்களுக்கு எதிர்கால சமுதாயம் என்றும் நன்றி கூற கடமைப்பட்டிருக்கிறது.

மேலும், இந்தியாவில் வலிமை மிக்க விளையாட்டு மையமாக தமிழ்நாட்டினை உருவாக்கும் சிந்தனையுடன், நாளும் பொழுதும் ஓயாது பாடுபட்டு வரும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர், துணை முதலமைச்சர் அவர்களின் சீரிய பணியைக் கண்டு இன்றைக்கு விளையாட்டு வீரர்கள், இளைஞர்கள், மாணவ மாணவியர்கள் தங்கள் எதிர்காலம் குறித்தும், அவர்களது குடும்பத்தினர் குறித்தும் ஒரு நம்பிக்கை அவர்களுக்குள் ஏற்பட்டுள்ளது. அந்த நம்பிக்கையினை மெய்ப்பிக்கும் வகையில் சமீபத்தில் உலக செஸ் சாம்பியன் பட்டத்தை வென்ற தமிழ்நாட்டு விளையாட்டு வீரர் தம்பி குகேஷ் அவர்கள் ஊடகத்தில் தனது வெற்றி குறித்து பேசுகிறபோது துணை முதலமைச்சர் அவர்களின் ஊக்கம்தான் எனது வெற்றிக்கு காரணம் என்று கூறியதை மிகுந்த மகிழ்ச்சியுடன் அவையில் பதிவு செய்ய கடமைப்பட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்றைக்கு இராமநாதபுரம் மாவட்டம் பிரப்பன் வலசை கடற்பகுதியில் துணை முதல்வர் அவர்களால் விளையாட்டு மேம்பாட்டுத் துறைமூலம் இந்தியாவில் முதன்முறையாக ஒலிம்பிக் நீர் விளையாட்டு அகாடெமி அமைப்பதற்கான பணி நடைபெற்று வருவதற்கு, இந்த இனிய வேளையில் இராமநாதபுரம் மாவட்ட மக்கள் சார்பிலும் அனைத்து விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் சார்பிலும் துணை முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியினை தெரிவித்துக்கொள்கின்றேன்.

கலைஞரின் கனவு இல்லம்!

குடிசை மாற்று வாரியம் என்று சொன்னால் நம் நினைவுக்கு வருவது முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பெயர்தான், அந்த வழியில் கழக அரசு அறிமுகப்படுத்தியுள்ள கலைஞரின் கனவு இல்லம் என்ற திட்டமானது இனிவரும் ஆண்டுகள் அனைத்தும் திராவிட மாடல் நாயகரின் ஆட்சிக்கு உட்பட்டதே என்பதை வருங்காலம் உறுதியளிப்பது உறுதி.

இன்று உலகம் முழுவதும் பரவிய குடும்பமாய் தமிழ் குடும்பம் இருக்கின்றது. It is a global village. முதல்வர் அவர்களுக்கு ஒரு பெருமை உண்டு. அந்த பெருமை என்னவென்றால், நம்முடைய முதல்வர் அவர்கள் தமிழ் நாட்டிற்கு மட்டும் முதல்வர் அல்ல. You are the father of this global village. உலகம் முழுவதும் பரவிக்கிடக்கின்ற தமிழர்களின் தந்தையாகவும், பாதுகாவலராகவும் இருந்து வருகின்றார்கள். தமிழர்களின் கலாச்சாரம், நாகரீகம், தமிழர்களுடைய அடையாள சின்னத்தை மீட்டெடுத்து பாதுகாக்கும் அரும்பெரும் பணிகளை செய்து வரும் திராவிட மாடல் ஆட்சியின் மற்றுமொரு திட்டமாக சிந்து சமவெளி நாகரிகம் என்பது திராவிட நாகரிகம் என்பதை நிலைநிறுத்துவதற்காக 8 கோடியே 45 லட்சம் ரூபாய் பரிசுத் தொகையை அறிவித்துள்ளமைக்கு தமிழ்நாடு முதல்வர் அவர்களுக்கு உலக மெல்லாம் உள்ள தமிழ் ஆய்வாளர்களும், தமிழ் மொழி பற்றாளர்களும், தொல்லியல் வல்லுநர்களும் பாராட்டி மகிழ்கிறார்கள் என்பதை இந்த அவையில் நான் தெரிவிக்க விரும்பு கிறேன்.

தமிழ் எழுத்துக்கள் வடிவம் கண்டுபிடிக்கப்பட்டு உறுதி செய்யப்படும் கால கட்டத்தில் தமிழர்களின் இருப்பு, தமிழ் மொழியின் வளர்ச்சி, உலகளாவிய அளவில் பரந்து விரியும் என்பது உறுதி. அத்தகைய வரலாற்று சாதனையை செய்துள்ள முதல்வர் அவர்களுக்கு பெருமையோடு நாம் நன்றி கூற கடமைப்பட்டிருக்கின்றோம்.

முதலமைச்சர் அவர்கள் வேளாண் துறை மூலமாக அறிமுகப்படுத்தியுள்ள 'மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம்' திட்டத்தை ரூ.206/ கோடியில் செயல்படுத்துவன்மூலம், கழக அரசின் பல்வேறு பார்வை கொண்டது என்பதை வாழும் சமுதாயத்திற்கு மட்டுமல்லாமல் வரவிருக்கின்ற சமுதாயத்திற்கும் நம்பிக்கையளிக்கும் என்பதை எண்ணி பெருமிதம் கொள்வோம்.

மீனவப் பெருங்குடி மக்களின் பாதுகாவலராக இருந்து வரும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த 18.8.2023 அன்று இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் பகுதியில் மீனவர் நலன் மாநாடு நடத்தி மீனவர்களுக்கான பல்வேறு நலத்திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட அப்பாவி மீனவர்களுக்கு தனது சீரிய முயற்சியால், அயராத முயற்சியின் பலனாக ஏறத்தாழ 1,106 மீனவர்கள் விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை நான் இந்த அவையிலே பதிவு செய்ய விரும்புகிறேன். தமிழ்நாடு திரும்பியது மட்டுமல்லாமல், அவர்கள் ஏறத்தாழ 2018 முதல் 2024 வரை இலங்கை கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்ட அப்பாவி மீனவர்களின் விசைப்படகு மற்றும் நாட்டுப்படகுகள் அனைத்திற்கும் இழப்பீட்டுத் தொகை நிதி வழங்கி, அவர்களின் வாழ்வாதாரம் பாதுகாக்கப்பட்டதற்கு முதலமைச்சர் அவர்களுக்கு ஏறத்தாழ தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய 14 மாவட்ட மீனவ சமுதாய மக்களின் சார்பாக நன்றிகளை நான் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், கடல்சார் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக அடுத்து 5 ஆண்டுகளில் ரூ.1,675 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு நெய்தல் மீட்சி இயக்கம் மிக உன்னதமான நோக்கங்களோடு செயல்படவுள்ளது என்பதை அறிந்து மீனவ சமுதாய மக்கள் மகிழ்ச்சியோடு இருக்கிறார்கள். நம்முடைய முதல்வர் அவர்களுக்கு நன்றி பாராட்டுகிறார்கள். நம் வாழ்வும் வளம் பெறும், தமிழ்நாடும் புகழ் பெறும் என்று வானளாவிய அளவிற்கு நம்பிக்கை வைத்துள்ள சமூகத்திற்கு முதல்வர் அவர்கள் தாயுமானவராக திகழ்கின்றார். இயற்கை பேரிடர்கள் தொடர்ந்த வண்ணம், மக்களைத் துயறுற செய்த நிலையில், ஒன்றிய அரசு மாற்றான்தாய் மனப்போக்குடன் இருந்தபோதிலும், கருணை உள்ளத்தோடு நிவாரண தொகை வழங்கிய கழக அரசை பாதிக்கப்பட்ட பொதுமக்கள் என்றைக்கும் மறக்க மாட்டார்கள்.

மக்கள் நலன் சார்ந்த அரசு என்பது ஒரு மகாநதி மேற்கொண்ட பயணம் போன்றது. அந்த மகாநதி தான் வந்த பயணத்தை தானே திரும்பிப் பார்க்கின்றபோது அதனுடைய கரைகள் எல்லாம் வளமைபெற்றிருக்கும். தடைகளை தகர்த்து இலக்கை நோக்கி பயணித்திருக்கும், அது வந்த இடமெல்லாம் பசுமை பூத்துக்குலுங்கும், தாகம் கொண்ட மனிதர்களின் தாகத்தை தீர்த்து வைத்திருக்கும், இதுதான் ஒரு மகாநதியின் பயணம். அந்த மகாநதியின் பயணத்தை போல இன்றைக்கு முதல்வர் அவர்கள் பல்வேறு திட்டங்களை நம்முடைய தமிழ் குடும்பங்களுக்கு தந்து கொண்டிருக்கிறார்கள். அந்த மக்களின் சார்பாக, முதல்வர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, முதல்வர் அவர்கள் இன்னும் மக்களுக்கு பயன்படும் பல்வேறு நலத் திட்டங்களை தொடர்ந்து வழங்க இருக்கிறார்கள் என்பதை பதிவு செய்துகொள்கிறேன்.

எங்களுடைய மாவட்டத்தின் சார்பாக, ஒரு கோரிக்கையை மட்டும் பதிவு செய்து என் உரையை நிறைவு செய்ய வேண்டுமென்று நினைக்கிறேன். பொதுவாக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், வைகை நதி பாயக்கூடிய இராமநாதபுரம் மாவட்டத்தை 'முகவை மாவட்டம்' என்று அழைப்பார்கள். அதற்கு என்ன காரணம் என்றால், வைகை நதி கடலிலே கலக்கக்கூடிய முகத் துவாரத்தை நிலப்பரப்பாகக் கொண்டதால், முகவை மாவட்டம் என்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அழைத்தார்கள். அந்த முகவை மாவட்டம் தமிழ்நாட்டின் இரண்டாவது நெற்களஞ்சியமாக இருக்கின்றது.

அந்த நெற்களஞ்சியமாக இருக்கின்ற பகுதி, நீர் மேலாண்மைக்கு ஒரு எடுத்துக்காட்டாக சேதுபதி மன்னர்கள் பல்வேறு நீர் மேலாண்மையை எடுத்திருக்கிறார்கள். கடந்த மாதம் 29, 30, 31 ஆகிய தேதிகளில் ஐயன் திருவள்ளுவருடைய வெள்ளி விழாவில் நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் தன்னுடைய உரையிலே இராமநாதபுரத்தில் மட்டும்தான் ஐயன் திருவள்ளுவன் சொன்ன சொல் 'ஊருணி' என்ற தமிழ்ச் சொல் இன்றும் நிலவி வருகிறது என்பதை பதிவு செய்தார்கள். தமிழ் மொழியைப் பிற மொழி ஆள முடியாது என்பதற்கு உதாரணம் இந்த 'ஊருணி' என்ற சொல்.

ஆகவே, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், முகவை என்ற சொல்லும் அந்த ஊருணி என்ற சொல்லும் சேர்ந்து 'முகவை ஊருணி' என்ற இராமநாதபுரம் மாவட்டத்தினுடைய, இராமநாதபுரம் தலைமையான பெரிய கண்மாயில் அமைந்திருக்கின்றது. சேது மன்னர்களிலே மிகச்சிறந்த நீர் மேலாண்மைக்கு எடுத்துக்காட்டாக மன்னன் இளவன் சேதுபதி, அந்த முகவை ஊருணியிலிருந்து கடலில் கலக்கக்கூடிய உபரி நீரை சேமித்து இராமநாதபுரம் நகரத்திற்கு ஏறத்தாழ 35 ஊருணிகளுக்கு குடிநீர் ஆதாரமாகத் தந்தார். அவைகளை மீண்டும் புணரமைத்து, நம்முடைய திராவிட மாடல் ஆட்சியின் நாயகன் முதலமைச்சர் அவர்கள் அந்த 33 ஊருணிகளையும் (மேசையைத் தட்டும் ஒலி) புனரமைக்க வேண்டுமென்று தாயுள்ளத்தோடு உங்களிடத்திலே, தாயுமானவரிடத்திலே கோரிக்கை வைத்து என் தொகுதிக் கோரிக்கைகளை உங்களிடத்திலே நான் தந்து விடுகிறேன். அதை பதிவு செய்ய வேண்டுமென்று கேட்டு, இந்த வாய்ப்பைத் தந்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றி பாராட்டி விடைபெறுகிறேன்.

இவ்வாறு காதர்பாட்சா முத்துராமலிங்கம் பேசினார்.

கழக கொள்கைப் பரப்பு துணைச் செயலாளர்

பி.ஆர்.சுந்தரம் மறைவு!

முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஜன. 17 -

கழக கொள்கைப் பரப்பு துணைச் செயலாளரும் நாமக்கல் நாடாளுமன்றத் தொகுதி முன்னாள் உறுப்பினருமான பி.ஆர்.சுந்தரம் மறைவுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது இரங்கலைத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து கழகத் தலைவர் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:

இராசிபுரம் சட்டமன்றத் தொகுதி மற்றும் நாமக்கல் நாடாளுமன்றத் தொகுதி முன்னாள் உறுப்பினர் பி.ஆர். சுந்தரம் அவர்கள் மறைந்ததை அறிந்து மிகவும் வருத்தமுற்றேன்.

மிக நீண்ட அரசியல் அனுபவம் கொண்ட சுந்தரம் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர், நாடாளுமன்ற உறுப்பினர் மட்டுமல்லாது அதற்கு முன்பும் பல்வேறு நிலைகளில் பல பொறுப்புகளில் சிறப்பாக மக்கள் பணி ஆற்றி வந்தவர் ஆவார். 2021ஆம் ஆண்டு முதல் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைந்து, கொள்கை பரப்பு துணைச் செயலாளராகவும் சுந்தரம் அவர்கள் பணியாற்றி வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

அவரை இழந்து வாடும் குடும்பத்தினர், அரசியல் இயக்க நண்பர்கள், நாமக்கல் மாவட்ட மக்கள் உள்ளிட்ட அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

இராஜபாளையம் தொகுதியில் 14.01.2025 அன்று காலை தைத்திருநாளான தமிழர் திருநாளை முன்னிட்டு ஜமீன்நல்லமங்கலம் சொக்கநாதன்புத்தூர், மேலூர் துரைச்சாமியாபுரம், தேவதானம், சுந்தரநாச்சியார்புரம், கிருஷ்ணாபுரம், செட்டியார்பட்டி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளுக்கு கிராமம் கிராமாக எஸ்.தங்கப்பாண்டியன் எம்.எல்.ஏ. சென்று கழக கொடியேற்றி பொதுமக்களுக்கு இனிப்புகளை வழங்கினார். இந்நிகழ்வில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் தனுஷ் எம்.குமார்., ஜி.சிங்கராஜ் அவர்கள் நகர செயலாளர்கள், ராமமூர்த்தி மணிகண்டராஜா, ஜெயமுருகன், கனகராஜ், இளங்கோவன், நவமணி, சுமதி ராமமூர்த்தி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

ஈரோடு மா. சுப்பிரமணியம்

சனவரி 15 (2013)

ஈரோடு மாவட்ட தி.மு.க. முன்னணித் தலைவர்களில் ஒருவராக விளங்கியவர்

ஈரோடு தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராகவும் – ஈரோடு நகராட்சி மன்றத் தலைவராகவும் சிறப்பாகப் பணியாற்றியவர்.

நெருக்கடிநிலை காலத்தில் மிசா சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு சிறைவாசம் அனுபவித்தவர்.

" 'மா.சு' என்று கழகத்தினரால் அழைக்கப்பட்டவர். இவரது குடும்பம் கழகத்திற்காக ஆற்றிய பணிகள் ஏராளம். குறிப்பாக நெருக்கடிநிலை நேரத்தில் ஈரோட்டில் தங்குவதற்கு விடுதிகள் எல்லாம் மறுக்கப்பட்ட நிலையில், அவரது இல்லத்தில் என்னைத் தங்க வைத்து உபசரித்ததை என்னால் என்றைக்கும் மறக்க முடியாது" என தலைவர் கலைஞர் அவர்கள் தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

ச. சுப்பையா

சனவரி 16 (1980)

சங்கரன்கோவில் சட்டமன்றத் தொகுதியில் 1971 மற்றும் 1977 ஆகிய இரண்டு முறை கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றதோடு, கழகப் பணியாற்றியவர்.

சங்கரன்கோவில் நகர்மன்ற உறுப்பினராகவும் – நகர கூட்டுறவு வீட்டு வசதி சங்கத் தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.

"எந்த நிலையிலும் நிலைகுலையாத – நெருக்கடி காலத்திலும் (மிசா) நிலைமாறாத தம்பிதான் பண்பாளர் ச.சுப்பையா" என தலைவர் கலைஞர் அவர்கள், அவரது இரங்கல் கூட்டத்தில் குறிப்பிட்டார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.